தலைப்பு 254 - பதிவாளர் நாயகம் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 254 - பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்தெம்பர் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06.ஃ.2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பதிவாளர் நாயகம் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது பதிவாளர் நாயகம் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06.'.2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல்

அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	காசு அடிப்படையில் வருமானத்தை கணக்கீடு செய்தல் திணைக்களத்தின கணக்கீட்டு கொள்கையானதுடன் வருமானக் குறியீடு 1003.07.02 (ஒட்டுமொத்த காசு மற்றும் தண்டப் பணம்) இன் கீழ் 2024 ஆம் அண்டு தொடர்பாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 11,619,885 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது விலைப்பட்டியலிடப்பட்ட (விதிப்புக்கள்) ரூபா. 11,898,137 ஆண்டிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா. 278,252 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட்டவாறு இநத ஆண்டிலும் 1003:07:02 வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2025-01-10 ஆந் திகதிய 01.∴2025 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்வரும் காலங்களில் பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தை மாத்திரம் வருமானமாக எடுத்துக்கொண்டு அறிக்கை	கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க சரியாக கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

		தயாரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.	
(ii)	2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06.்.2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற ஆண்டிற்குரிய நிலுவைப் பணத்தின் வருட ஆரம்ப மீதியும் கடந்த ஆண்டிற்குரிய நிலுவைப் பணம் மற்றும் கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டளவில் நிலுவைப் பணத்திற்காக அறிக்கையிடப்படுகின்ற ஆண்டிற்குரிய நிலுவைப் பண மீதியும் காணப்பட முடியாத போதிலும் உரிய நிரலில் முறையே ரூபா. 33,061,833, ரூபா. 7,111,533 மற்றும் ரூபா. 7,386,109 என்பனவாக மீதிகளைக் காட்டி நிலுவை வருமானம் தொடர்பான கூற்று பிழையாக தயாரிக்கப்பட்டிருந்தது.	கடந்த ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டுள்ள முறையில் இந்த ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் கணக்காய்வினால் தெரியப்படுத்தியவாறு அறிக்கை தயாரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிர்ணயிக்கப்பட்ட மாதிரிக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(iii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படக்கூடிய உச்ச அளவு நிலுவை வருமான மீதி ரூபா. 30,273,522 ஆக இருந்த போதிலும் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் நிலுவை வருமான மீதி ரூபா. 96,895,102 ஆகும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானம் ரூபா. 66,621,580 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	கணக்குகள் சமர்ப்பிக்கபபட்டுள்ள அறிக்கையின் பிழைகளின் காரணமாக இது ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன்.	சரியான பெறுமதிகளை உள்ளடக்கி வருமான கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(iv)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் நிவாரணங்கள் மற்றும் மாற்றுதல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா. 18,269,665 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சலில் ரூபா. 18,628,551 ஆக காட்டப்பட்டதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா. 358,886 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	பிழையாக 1701 இன் கீழ் கடன் மீதியை பதிவழித்தலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளாக காட்டப்பட்டுள்ளது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.	கணக்கீட்டு தத்து இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
செலவு விடயம் 2106 இன் கீழ் மென்பொருட்களை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் பிரசுர ஸ்கேன் இதற்காக ரூபா. 118,369,366 பணம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தும் அது தொடர்பாக பயன்படுத்தக்கூடியவாறு அபிவிருத்தி செய்துள்ள எந்த மென்பொருளும் மீளாய்வாண்டின் இறுதி வரை திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை. எனினும் முறைப்படியான கணக்கீட்டு கொள்கை அறிமுகப்படுத்தப்படாது செலவு செய்யப்பட்டிருந்த பணம் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் ஆக நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பிரசுக ஸ்கேன் என்பது ஒரு மென்பொருள் அல்ல அது திணைக்களத்தின் தொடக்க செயற்பாடான பத்திரங்களை பேணிப் பாதுகாப்பதற்காக செய்யப்படுகின்ற ஒரு செயற்பாடாகும். அது ஒரு சொத்தாக இருப்பதானது எதிர்காலத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட பத்திரங்களை ந-டுயனெ மென் பொருளுக்கு உள்ளடக்கப்பட்டு அதிலிருந்து பிரதியை வழங்கி நிறுவனத்தின் வருமானம் உருவாகின்ற ஒரு வழியை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.	நியாயமான கணக்கீட்டு கொள்கையை பின்பற்றி மூலதனச் செலவுகள் செய்யப்படுதல் வேண்டும்.

(இ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க திணைக்களத்தின் முற்பணங்கள் ‘‘பீ’’ கணக்கு நடவடிக்கைகளுக்காக அங்கீகரித்த உச்ச அளவு வரவு மீதி எல்லை ரூபா. 320,000,000 ஆக இருந்த போதிலும் முறையாக முகாமைத்துவம் செய்யப்படாது கடன் வழங்குதல் மற்றும் கடனை பொறுப்பேற்றலின் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 15,614,150 இனால் எல்லையை மிகைத்தல் இடம்பெற்றிருந்தது. நி.பி 503(2) இன்	2024-12-31 ஆந் திகதியில் உள்வாறு மிகைத்திருந்த ரூபா. 15,614,150 வரவு மீதி எல்லையில் ரூபா. 12,699,807 ஆனது இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள (254012) உத்தியோகத்தரின் கடன் மீதியை தீர்த்துவைக்கப்பட்ட பணம் ஆனதுடன் உச்ச அளவு வரவு மீதி எல்லையை ரூபா. 336,000,000 வரை திருத்தம் செய்வதற்காக அமைச்சின் மூலம் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பின்பற்றப்படாமை சம்பந்தமான வேண்டுதல் பத்தீரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் திறைசேரிகு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படு தல் வேண்டும்.

பிரகாரம் எல்லையை மிகைத்தல் காணப்படுகின்றதா என்பதனை அடையாளங்கண்டு உரிய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்காண்டு முடிவடைந்து 41 நாட்கள் கடந்த பின்னர் அதாவது 2025 பெப்வரி 10 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு உரிய வேண்டுதல் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த தாமதம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது திறைசேரியினால் 2025 மே 22 ஆந் திகதி பாராளுமன்றத்திடம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2025-05-22 ஆந் திகதி பாராளுமன்ற அங்கீகாரம் கிடைத்துள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.	

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின்) (1)6ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நி.பி. 143(1) இன் பிரகாரம் மதிப்பீடு செய்யும் உத்தியோகத்தரினால் சேகரிப்பதற்கு எதிர்பாரக்கப்படும் பணத்தை முடியுமான அளவிற்கு சரியாக மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் தொடக்க வருமான மதிப்பீடானது முறையான முன்னறிதல் இன்றி தயாரிக்கப்பட்டதனால் ஆண்டின் போது பதிவு செய்தல் கட்டணம் 08 சதவீதத்தினால் அல்லது ரூபா 200 மில்லியனால் அதிகரித்தலும் நொத்தாரிசுகளுக்கு உச்சநீதிமன்ற சான்றிதழினை வழங்கும் கட்டணம் 70 சதவீதத்தினால் அல்லது ரூபா	வெளிநாட்டு தூதுவராலய செயற்பாடுகளுக்காக கிடைத்த வருமானம் திணைக்களத்தின் வருமான குறியீடு 1003:07:02 இற்கு செலவு வைத்ததன் காரணமாக பதிவு செய்தல் கட்டணம் ரூபா 200 மில்லியனால் திருத்தப்பட்டதுடன் 2024 ஆம் ஆணடின் போது அமைச்சிற்கு அனுப்பப்பட்ட அனுமதிப்பத்திரம் அமைச்சரினால் கையொப்பமிடாமை, அனுமதிப்பத்திற்காக சட்ட ஆலோசனைகளைப்	முறையாக முன்அறிந்து மதிப்பீட்டினை தயாரிப்பதனை கவனித்துக் கொள்ள வேண்டும்.

	7,700,000 மில்லியனால் குறைத்தலும் இடம்பெற்றிருந்தது.	பெற்றுக்கொள்ளல் தாமதமடைந்தமை, ஒவ்வொரு ஆண்டும் சட்டக் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் அனைவரும் ஒரே நேரத்தில் முதலாவது அனுமதிப்பத்திரத்தினை வேண்டிக்கொள்ளாமையும், முதலாவது அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொண்ட அனைவரும் ஒரே நேரத்தில் மேலதிக மொழியை வேண்டிக்கொள்ளாமையும் நீதிமன்ற வலயம் மாற்றப்படாமையும் போன்ற காரணங்களால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 11 மில்லியன் வருமானம் திருத்தம் செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.	
(ஆ)	மீளாய்வாண்டு ஆரம்பிக்கையில் முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்காக காணப்பட்ட ஒட்டுமொத்த தண்டப்பண நிலுவை வருமானம் ரூபா. 33,061,833 தொகையும் மீளாய்வாண்டின் போது விதித்தல் ரூபா. 11,898,137 தொகையுமாக இருந்ததனால் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட வேண்டிய ஒட்டுமொத்த தண்டப்பண வருமானம் ரூபா. 44,959,970 ஆகும். எனினும் கடந்த ஆண்டிற்கான நிலுவை வருமானத்தில் ரூபா. 6,937,620 மாத்திரம் மீளாய்வாண்டில் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது 21 சதவீதமாகும். அவ்வாறே மீளாய்வாண்டின் போது விதிக்கப்பட்டவைகளிலிருந்து 39 சதவீதமான ரூபா. 4,682,265 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்துடன் அறவீடு செய்யப்படாத 61 சதவீதமான ரூபா. 7,215,872 வருமானம் நிலுவை வருமானத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் அறவீடு செய்யப்பட வேண்டிய ஒட்டுமொத்த தண்டப்பண வருமானத்தில் மொத்தமாக அறவீடு செய்தல் ரூபா. 11,619,885	2025 ஆம் ஆண்டிலிருந்து சமரசம் செய்ததன் மூலம் கிடைக்கின்ற வருமானம் மாத்திரம் கணக்கீடு செய்யப்படுவதனால் சமரசம் செய்தல் கணக்குகளில் நிலுவை வருமானத்தை காட்டுவதற்கான தேவைப்பாடு உருவாகியிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.	வருமானங்களை துரிமதமாக அறவீடு செய்வதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

	மாத்திரமானதுடன் அது 26 சதவீதம் ஆன மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.		
(இ)	தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு இரண்டாம் பிரதியை சமர்ப்பித்தல் தாமதமடைந்ததன் காரணமாக நொத்தாரிசுமார்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பல ஆண்டுகளாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா. 1,261,422 ஒட்டுமொத்த கட்டணம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிலுவையாகக் காணப்பட்டது.	முன்பிலிருந்தே காணப்பட்டு வரும் ரூபா. 1,261,422.00 பணமானது ஒட்டுமொத்த பணக் கட்டணங்களின் நிலுவைப் பணமாகும். 01/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவையான ஒட்டுமொத்த பணத்தையும் செலுத்தாதுள்ள நொத்தாரிசுமார்களின் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சில நொத்தாரிசுமார்கள் பணத்தை செலுத்தி வருகின்றார்கள் 2025 கணக்குகளில் நிலுவை மீதியை காட்டுவதில்லை என தெரிவிக்கப்பட்டது.	வருமானத்தை சேகரிப்பதனை வினைத்திறனாக செய்தல் வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	04 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக நிதி ஏற்பாடு சேமிப்பாகக் காணப்பட்டிருந்தும் அந்த செலவு வழங்களுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 399,346 செலவு மூலதன செலவு விடயங்களுக்கு வரவுவைக்கப்பட்டிருந்ததுடன் இன்னும் ஒரு மீண்டுவரும் செலவு விடயத்திற்கு வரவுவைக்கப்பட வேண்டிய ரூபா. 505,737 செலவு மூலதன செலவு விடயத்திற்கு வரவுவைத்ததனால் மீண்டுவரும் செலவு விடயத்தில் ரூபா. 327,032 மிகைச் செலவு அல்லது மிகைகள் தவிர்க்கப்பட்டிருந்தது.	நீண்டகாலமாக பயன்படுத்தக்கூடிய மற்றும் பொருள் இருப்பு பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படுகின்ற பொருட்கள் தொகை பற்றி கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது இதுவரை காலமும் வரவுவைக்கப்பட்டது மூலதன செலவு விடயத்தின் கீழ் ஆனதுடன் எதிர்வரும் காலங்களில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன்.	செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	04 செலவு விடயங்களுக்கான நிதி ஏற்பாடு போதாதிருந்ததன் காரணமாக ஏனைய குறிக்கோள்களுக்காக 05 செலவு விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா.	நு-டுயனெஇ நுீ-ழிஇ நுஆடீனு ஆகிய செற்திட்டங்களுக்காக இடர் மீளமைப்பு தரவு நிலையத்தினை (நுசு ளுவைந) கொள்வனவு	தேவைப்பாட்டிற்கு ஏற்ப போதியளவான நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு

	400,000,000 நிதி ஏற்பாடு தேவைப்பாட்டினை உறுதியாக அடையாளம் கண்டுகொள்ளாது நி.பி 66 இன் மூலம் மாற்றிக் கொண்டதன் காரணமாக அந்த நிதி ஏற்பாடுகளில் 21 சதவீதத்திலிருந்து 91 சதவீதம் வரையான மொத்தமாக ரூபா. 60,339,195 நிதி ஏற்பாடு சேமிப்பாக காணப்பட்டது.	செய்வதற்கு ரூபா. 50 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் தற்பொழுது திணைக்களத்தில் இருக்கின்ற ளுயளநச ருிபசயனந செய்வதன் மூலம் அத்தேவைப்பாட்டினை நிறைவேற்றிக் கொள்ளலாம் என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா. 46,400,934 பணம் சேமிக்கப்பட்டிருந்தது எனவும் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு பணம் முடிவடைந்ததன் அடிப்படையில் இந்த நி.பி 66 மாற்றல்களின் மூலம் நிதி எற்பாடு வழங்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.	முடியுமான வகையில் முறையான முன்னறிதலுடன் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(இ)	254-01-01-1102 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா. 500,000 தொகையில் ரூபா. 400,000 ஏனைய செலவு விடயத்திற்கு மாற்றியதன் பின்னர் ரூபா. 100,000 சேமிப்பாகக் காணப்பட்டிருந்தும் அது நூறு வீதம் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் 254-01-02-1102 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா. 500,000 நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.	வெளிநாட்டுப் பயணத்திற்காக நிதி ஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் பயண மட்டுப்பாட்டின் காரணமாக நிதி ஏற்பாடு செலவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.	தேவைப்பாட்டினை முறையாக அடையாளங்கண்டு போதிய அளவில் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் 14 செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா. 235,700,000 நிதி ஏற்பாட்டில் ரூபா. 72,614,083 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது செலவு விடயத்தின் சேமிப்பு சதவீதம் 11 சதவீதத்திலிருந்து 78 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட விலைகளின் அடிப்படையில் 2024 மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதனால் எரிபொருள போன்ற செலவு விடயங்கள் தொடர்பாக 2024 ஆம் ஆண்டின் போது விலைகள் குறைவடைதல், மின் வெட்டு குறைவடைதலின் அடிப்படையில் காணிப் பதிவாளர் அலுவலகங்களில் மின்பறிப்பாக்கி இயந்திரங்களை	தேவைப்பாட்டினை அடையாளங்கண்டு போதியளவு நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பயன்படுத்துதல் குறைவடைதல், அரசாங்க கொள்கையின் அடிப்படையில் வெளிநாட்டு பயணங்களை நிறுத்திவைத்தல், மேலதிக நேர வேலைகளை மட்டுப்படுத்துதல், நாட்டில் காணப்பட்ட பொருளாதார பிரச்சினைகளின் காரணமாக செலவுகள் மட்டுப்படுத்தப்படுதல், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் செலவுகளை முகாமைத்துவம் செய்தல் என்பவற்றின் அடிப்படையில் அவ்வாறு நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 10 ஆந் திகதியிலிருந்து 2025 சனவரி 09 ஆந் திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக செலுத்த வேண்டிய கட்டிட வாடகை ரூபா. 540,000 பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	தவறுதலாக பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	பொறுப்புக்களை சரியாக அடையாள்ஙகண்டு கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 செலவு விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள ரூபா. 30,434,279 பொறுப்புக்களின் பெறுமதியானது நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் கூற்றிற்கு ரூபா. 12,050,471 ஆக ரூபா. 18,383,808 குறைத்தும் 03 செலவு விடயங்கள் தொடர்பாக பெர்றுப்புக்கள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள ரூபா. 503,583 பொறுப்புக்களின் பெறுமதி பொறுப்புக்கள் கூற்றில் ரூபா. 2,973,424 ஆக ரூபா. 2,469,841 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.	கணக்கு கூற்றுக்களை 2025 பெப்ரவரி 24 ஆந திகதி சமர்ப்பிக்க வேண்டி இருந்ததனால் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 2025 சனவரி 30 ஆந் திகதி வரையுமான பொறுப்புக்கள் மாத்திரம் கணக்கு கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	நாளாந்தம் பொறுப்புக்கள் பதியப்பட்டு பொறுப்புக்கள் பதிவேடு சரியக பேணப்படுதல் வேண்டும்.

3.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
பிம்சவிய கொள்வனவுகளுக்காக மீளாய்வாண்டின் போது சுற்றுலா மற்றும் காணி அமைசசிடமிருந்து 122-02-03-04-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா. 206,743,567 நிதி ஏற்பாட்டில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா. 104,885,556 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் சேமிப்பு ரூபா. 101,858,011 ஆகும். அதற்கிணங்க பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடானது முழு நிதி ஏற்பாட்டில் 50.7 சதவீதமான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது.	பிம்சவிய கொள்வனவுகளுக்காக சுற்றுலா மற்றும் காணி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில் உரிமைப்பத்திர அலுவலகத்திற்கு கணனி நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரிப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அப்பெறுகைச் செயற்பாடு ஆலோசனை ரீதியான பெறுகைச் செயற்பாடு என்பதனால் திணைக்களத்தின் செலவு எல்லையை மிகைத்து மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகைச் செயற்பாடு என்பதனால் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதறகு திணைக்களத்திற்கு அதிகாரம் இல்லை என்பதனால் அச்செயற்பாடு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. எனினும் திறைசேரியின் மூலம் காணி அமைச்சின் நிதி ஏற்பாட்டினை மீண்டும் பொறுப்பேற்றதன் காரணமாக அந்த பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. எனவே அந்த நிதி ஏற்பாடு சேமிப்பாக இருந்தது என தெரிவிக்கப்பட்டது.	திணைக்களத்தின் அதிகாரத்திற்குள் நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளுக்காக மாத்திரம் நிதி ஏற்பாட்டினை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் ∴ கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே காட்டப்பட்ட விடயம் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகன்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	தற்பொழுது அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் எதிர்காலத்தில் அந்த வெளிப்படுத்தலானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணக்கமின்மை**		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஓடுஏஜஜஜ ஆம் அத்தியாயத்தின் 13.9 ஆம் பிரிவு	-	தொடக்க புலனாய்வு உத்தியோகத்தராக ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தரினை நியமிப்பது மிகவும் பொருத்தமானது என	தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மிகவும் பொருத்தமான மற்றும் வினைத்திறனானஉள்ளகக் கட்டுப்பாட்டு	தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்கள் இல்லாமையின் காரணமாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புலனாய்வுப் பிரிவிற்கு

				காட்டப்பட்டிருந்தும் தொடக்க புலனாய்வு உத்தியோகத்தர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிக்கும் கூடுதல் போக்கு காணப்படுவதனால் புலனாய்வு நடவடிக்கைகளை செயற்திறனாக பூர்த்தி செய்யும் பலவீனங்கள் காணப்பட்டன.	முறைமையை ஸ்தாபித்து தொடக்க புலனாய்வினை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இணைத்துக்கொள்ளப்பட்டு அவர்களை பயிற்றுவித்து புலனாய்வு மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை					
	(i)	நி.பி 113(3)	1,968,066	மோசடி அல்லது காணப்படுகின்ற முறைமையில் குறைபாடுகள் இல்லாதிருக்கையில் மாத்திரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அரசாங்க வருமானத்திலிருந்து விட்டுவிடுதல்கள் மேற்கொள்ளலாம் என்ற போதிலும் பல ஆண்டுகளாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது நிலுவையாக இருந்த வருமானத்திற்கு திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி கணக்கீட்டு உத்தியோகத்தரினால்	அரசாங்க வருமானம் அல்லது அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணத்தை அறவீடு செய்யும் உரிமைக்கோரிக்கையினை கைவிடுதலானது நி.பி 108(ஈ)(ை) இன் பிரகாரம் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.	அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படுகின்ற அனைத்து பணத்தையும் அறவீடு செய்வதற்கு அல்லது அந்த பணத்தை இரத்துச் செய்வதற்கு பதிவாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது என காட்டப்பட்டுள்ளது.

			ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது.		
(ii)	நி.பி 113(4)	-	கட்டணம் அல்லது அறவீடுகளை விட்டுவிடுவதற்கான அங்கீகாரத்தினை வழங்குவதற்கு வழங்கப்படுகின்ற அனைத்து கடிதங்களினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் அந்த அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	நி.பி 113(4) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் அத்தியவசியமானது என்பதனால் உரிய வேளைக்கு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.	கட்டணம் அல்லது அறவீடு செய்யும் அதிகாரி பதிவாளர் நாயகம் என்பதனால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதி அனுப்பிவைக்கப்படாததுடன் எதிர்வரும் காலங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது.
(இ)	2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05.̇.2023 ஆம் இலக்**க** அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 3.1 பந்தி	-	புதிய சிகாஸ் இணைய வழி உள்ளீட்டு முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ளுயு-40 மற்றும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று மாதிரி (பின்னிணைப்பு - ளை) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.	கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேடு சிகாஸ் கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தும் அதில் காணப்பட்ட தொழில்நுட்ப குறைபாடுகளின் காரணமாக கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பதிவேற்றம் செய்யப்பட்டிருக்காததனால் புதிய சிகாஸ் இணைய வழி உள்ளீட்டு முறைமையின் மூலம்

					பெற்றுக்கொள்ளப் பட்ட ஞயு-40 மற்றும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று மாதிரியை (பின்னிணைப்பு ளை) சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது என காட்டப்பட்டுள்ளது.
(ஈ)	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி இலக்கம் 2310/29 இன் 158 ஆம் விதி	-	ஒவ்வொரு ஆண்டு சனவரி 01 மற்றும் யூலை 01 ஆந் திகதிகளில் உள்ளவாறான சேவை மூப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதனை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆணைக்குழு நடைமுறை விதியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.	2025-01-01 ஆந் திகதியில் நாளதுவரையாக்கப்பட்டுள்ளது.

3.7 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயலுக்கான உபகட்டு நிதியானது அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட	கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் அவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.	முற்பணங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உடன் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் பதிவாளர் நாயக திணைககளத்தின் 18 உத்தியோகத்தர்களினால் 22 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மொத்தமாக ரூபா. 1,868,904 ஆன உப கட்டநிதிகளை தீர்த்துவைத்தலானது 07 நாட்களிலிருந்து 73 நாட்கள் வரையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
பொது மக்களின் சிவில் உரிமைகள், நிரந்தர மற்றும் அசையும் ஆதனங்களின் சட்டரீதியான உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களைப் பதிவு செய்தல் பேணிப்பாதுகாத்தல் மற்றும் சான்றுபடுத்திய பிரதியை வழங்கும் மக்களை மையாமாகக் கொண்ட சேவைகளை வழங்குவதில் முன்னோடியாக செயற்படுதல் திணைக்களத்தின் தூர நோக்கானதுடன் நிரந்தர மற்றும் அசையும் ஆதனங்களுக்குரிய சட்டரீதியான ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் இலங்கையிலுள்ள காணி உரிமைகளைப் பதிவு செய்தல் மற்றும் பொது மக்களின் வாழ்க்கையில் முக்கியத்துவமான சந்தர்ப்பமான திருமணம், பிறப்பு மற்றும் இறப்புக்களைப் பதிவு செய்தல், அந்த ஆவணங்களைப் பேணிபாதுகாத்தல் மற்றும் வேண்டிக்கொள்வதன் அடிப்படையில் அவற்றின் சான்றுபடுத்திய பிரதியை வழங்குதல் மற்றும் அதன் மூலம் பொதுமக்களுக்கு தமது உரிமையை பாதுகாப்பதற்கு உதவியளித்தல் திணைக்களத்தின் செயற்பணியாக இருந்த போதிலும் இந்த அறிக்கையின் 4.2, 4.5, 5, 6 மற்றும் 7 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள	இதற்காக இந்த அறிக்கையின் 4.2, 4.5, 5, 6 மற்றும் 7 ஆம் பந்திகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள பதில்கள் தொடர்புபட்டவை என தெரிவிக்கப்பட்டடிருந்தது.	திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணியை அடைந்துகொள்வ தற்கு தேவைக்கு ஏற்ப திட்டங்களை தயாரித்து செயற்பாடுகளை முறைமைப்படுத் துதல் வேண்டும்.

விடயங்களின் பிரகாரம் திணைக்களத்தின் கடமைகள் மற்றும் பணிகள் செயறதிறனாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.		

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
ஈ - காணிகளை பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டம் (e - Land Registstry Program) திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கும் ஏனைய தரப்பினர்களின் தேவைப்பாட்டிற்குமாக காணிப் பதிவேடுகளை பரீட்சிக்கும் நடவடிக்கைகளை இணைய வழியினூடாக மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஆவணங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் அமுலப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை மீளமைப்புச் செய்யும் நடவடிக்கை 2016 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதன் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.	இது கட்டம் I மற்றும் II தற்பொழுது நான்கு முன்னோடி அலுவலகங்களில் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் III ஆம் கட்டம் இன்னும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்காததுடன் ஐஐஐ ஆம் கட்டிடத்தினையும் அலுவலகங்களில் அமுல்ப்படுத்தியதன் பின்னர் இதன் பிரதிபலன்களை பொது மக்களால் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படடிருந்தது.	எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாடடுட முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
தகவல் தொழில்நுட்ப பிரிவில் காணப்பட்ட சம்சும் வகையான 03 பிரின்டர்கள், கெனொன் வகையான மற்றும் லெக்ஸ்மார்க் வகையான 02 பிரின்டர்கள் மற்றும் 01 கலர் பிரின்டர் காணாமல் போயுள்ளது என 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வின் போது அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வின்	திருத்தம் செய்தல் தகவல்கள் முறையாக ஆவணப்படத்தப்படாமையின் அடிப்படையில் சரியான தகவல்களை தேடிக் கண்டுபிடிப்பதிலுள்ள சிக்கல்களின் காரணமாக உரிய காலப்பகுதிக்குள் கைதவிர்ப்புச் செய்வதற்காக அவற்றினை வழங்கும	அரசாங்கத்தின் ஆதனங்களை பாதுகாப்பதற்காக வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

போது அவற்றிற்கு மத்தியில் சம்சும் வகையான அனைத்து பிரின்டர்களும் துண்டு துண்டாகக் காணப்பட்டன எனவும் மிகுதியானவை அழிக்கப்பட வேண்டியவை எனவும் சிபாரிசகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க சொத்துக்களைப் பயன்படுத்தும் போது ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது எனவும் அரசாங்கத்தின் ஆதனங்களை பாதுகாப்பாக பேணுவது சம்பந்தமாமக வலுவான உள்ளகக் கட்டுப்பாட:டு முறைமை திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருககவில்லை.	கட்டளையுடன் வழங்கல் பிரிவிற்கு அனுப்பிவைக்க முடியாதுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் ஆவணங்களை முறைப்படியாக பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.	

4.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்களத்தினால் பயன்படுத்திக் கொண்டிருந்த முயு-8957 ஆம் இலக்க வாகனம் 2022 சனவரி 20 ஆந் திகதி விபத்திற்கு உள்ளாக்கியதன் காரணமாக ரூபா. 1,735,950 நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதனை திருத்தம் செய்தல் நடவடிக்கைகளின் பின்னர் ரூபா. 845,205 தொகை மாத்திரம் காப்புறுதி இழப்பீடாக கிடைத்திருந்தது. அதனால் ரூபா 890,745 தேறிய நட்டம் திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்ததுடன் நி.பி. 104 இன் பிரகாரம் பொர்றுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு அதனை அறவீடு செய்வதற்ாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நி.பி 104 விசாரணைகள் தற்பொழுது இடம்பெற்று வருவதுடன் அடுத்துவரும் 02 மாதங்களுக்குள் அந்த நடவடிக்கையை பூர்த்தி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது.	நட்டத்தை துரிதமாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள
(அ)	தாபனவிதிக் கோவையின் ஒஓஐஏ ஆம் அத்தியாய்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல்	மரணமடைந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியானது மரண	நிலுவைக் கடன் மீதியை துரிதமாக

	உள்ளவாறு மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, இராஜினாமா செய்த/ சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டி இருந்த ரூபா 3,700,210 கடன் மீதியில் 03 மாதங்களிலிருந்து 20 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 2,672,109 கடன் மீதி 2025 மே 29 ஆந் திகதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பணிக்கொடையிலிருந்தும், ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்ரத்களின் கடன் மீதியானது ஓய்வூதியத்திலிருந்தும், இடைநிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதியை துரிதமாக செலுத்தமாறு தெரியப்படுத்துவதன் மூலமும், சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிக்காக பிணையாளர்களுக்கு துரிதமாக கடனை தீர்த்துவைக்குமாறும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.	அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க உத்தயோகத்தர் எவரினாலும் அல்லது சில உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளளப்பட்ட ஒழுங்கீனங்கள் சம்பந்தமான தொடக்க புலனாய்வினை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டிய போதிலும் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த முறைப்பாடுகளை பரீட்சிப்பதற்காக தொடக்க புலனாய்வு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அவ்வாறே தொடக்க புலனாய்வு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் தொடக்க புலனாய்வு நடவடிக்கைகள் முடியவடைந்திருக்காமையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருந்தது. அதற்கிணங்க ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை வினைத்திறனாக பூர்த்திசெய்வதற்கு போதியளவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கையில் தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்கு முன்னர் புலனாய்வினை மேற்கொண்டு அதில் வெளிப்படுத்தப்படும் விடயங்களுக்கு இணங்க தொடக்க புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமான சந்தர்ப்பங்களில் தொடக்க புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொடக்க புலனாய்வு உத்தியோகத்தர்களை நியமித்து தொடக்க புலனாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் விசாரணைகளை மேற்கொண்டு விசாரணை அறிக்கைகளை கவனத்திற்கு எடுத்து அதற்கிணங்க தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கையில் எடுக்கும் காலத்திற்கு இணங்க தொடக்க புலனாய்வு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு எடுக்கும் காலமும் மாற்றமடையும் என தெரிவிக்கப்பட்டது.	ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை செயற்திறனாக பூர்த்தி செய்வதற்கு போதியளவிலான மற்றும் முறையான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையினை ஸ்தாபித்தல் வேண்டும்.

(இ)	நாரம்பல காணிப் பதிவாளர் அலுவலகத்தில் கே.கே.எஸ் III ஊழியர் மோசடியான செயற்பாடுகளில் ஈடுபட்டமை சம்பந்தமாக 2022 சனவரி 25 ஆந் திகதி பதிவாளர் நாயகத்திற்கு ஒரு முறைப்பாடு அனுப்பிவைக்கப்பட்டிருந்துடன் 2025 மே மாதம் முடியும் வரை அந்த ஊழியர் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 மார்ச் 19 ஆந் திகதி உரிய உத்தியோகத்தருக்கு குறுகிய ஒழுக்கத்தின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	ஒழுக்காற்று நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்குமாக திருப்திகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	மஹர காணிப் பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக செய்றபாட்டு உதவியாளர் சேவையிலுள்ள ஒரு ஊழியரினால் அலுவலக செயற்பாடுகளுக்கு தடையான வகையில் நடவடிக்கை எடுத்தமை சம்பந்தமாக 2022 யூன் 15 ஆந் திகதி கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தமாக 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை புலனாய்வு நடவடிக்கைகளை முடிவுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது.	ஒழுக்காற்று நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கும் துரிதப்படுத்துவதற்குமாக திருப்திகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.
(உ)	ஆவணங்களைப் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் 17(ஆ) பிரிவு மற்றும் பதிவாளர் நாயகத்தின் கையேட்டின் 267 மற்றும் 268 ஆம் திணைக்கள கட்டளைகளின் பிரகாரம் பதிவுசெய்வதற்காக கிடைக்கின்ற உறுதிகள்∴ ஆவணங்களுக்கு 21 நாட்களுக்குள் பதிவுசெய்தலினை முடிவு செய்ய வேண்டிய போதிலும் பொதுமக்களினால் சாதாரண சேவையின் கீழ் பதிவுசெய்வதற்காக தெல்கந்த காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த உறுதிகளில் அதிக எண்ணிக்கையானவை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விடுமுறை நாட்களில் அலுவலகத்தினை திறந்து உறுதிகளை பதிவுசெய்யும் நடவடிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது.	உத்தியோகத்தர் க ளின் நாளாந்த கடமை நடவடிக்கைகளை நாளதுவரையாக்கும் வகையில் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துதல் வேண்டும்.
(ஊ)	நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவில் குறிப்பிட்ட சட்ட விதிகளை முறைப்படியாக பின்பற்றி நொத்தாரிசுகளால் குறைபாடுகளுடன் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்துப் பார்த்து	ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பதிவுசெய்வதற்காக ஆவணங்களைப் பொறுப்பேற்கும் போது அக்குறைபாடுகளை	ஆவணங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையை செயற்திறனாக செய்தல் வேண்டும்.

	பொறுப்பேற்பதற்காக பொருத்தமான வேலைத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக ஆவணங்களிலுள்ள குறைபாடுகளை பரீட்சித்தலானது பதிவுசெய்யும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான இலிகிதரினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனால் ஆவணங்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தடையாக இருந்தது.	பரீட்சித்தலானது ஆவணங்களைப் பொறுப்பேற்கும் உத்தியோகத்தருக்குரிய கடமை இல்லாததுடன் சமர்ப்பிக்கின்ற அனைத்து ஆவணங்களும் அந்த உத்தியோகத்தரினால் பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.	
(எ)	தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை பதிவினை முடிவு செய்து ஆறு மாதங்கள் கடந்திருந்த 2,352 உறுதிகள் காணப்பட்டிருந்தும் 1927 இன் 23 ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் ஏ ஆம் அத்தியாயத்தின் 28(2)(அ) பிரிவு மற்றும் பதிவாளர் நாயகத்தின் கையேட்டின் 315(அ) பிரிவின் பிரகாரம் உரிய தரப்பினர்களுக்கு மீள ஒப்படைப்பதற்கு அல்லது பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமையின் காரணமாக தேவையற்ற வகையில் பல ஆவணங்கள் அலுவலகத்தில் ஒன்றுசேர்ந்து காணப்பட்டது.	உறைகளுடன் இருந்த உறுதிகள் தற்பொழுது தபாலில் இடப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் மிகுதியான உறுதிகள் சம்பந்தமாக தற்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது.	அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் 31(26) ஆம் பிரிவு, ஆவணங்களைப் பதிவுசெய்யும் கட்டளைச்சட்டத்தின் 4(1), (2) ஆம் பிரிவு, பதிவாளர் நாயகத்தின் 374(1) மற்றும் 375 ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நொத்தாரிசுகளால் தாம் சாட்சி வகிக்கும் உறுதிகளின் இரண்டாவது பிரதியானது அனைத்து உறுதிகளும் எழுதி கையொப்பமிட்டு ஒரு மாதத்திற்கு பின்னர் வருகின்ற மாத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய காணிப்பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் மாதம் வரையான காலம் தொடர்பாக தெல்கந்த காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு உறுதிகளின் பிரதிகளை ஒப்படைக்க வேண்டிய 72 நொத்தாரிசுகளால் எழுதப்பட்ட உறுதிகளின் 1,162	ஆளணியினர் பற்றாக்குறை இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. எனினும் பரீட்சிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதுடன் முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியானது பதிவு செய்யப்படுகையில் வழங்குதல் கண்டிப்பானது என தெரிவிக்கப்பட்டது.	அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சிறந்த பின்தொடர் நடைமுறையினை உருவாக்குதல் வேண்டும்.

	இரண்டாவது பிரதிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு உறுதிகளின் இரண்டாவது பிரதிகள் ஒப்படைக்கப்படாமையால் நொத்தாரிசுகளால் உறுதிகளின் உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற முத்திரைக் கட்டணம் முறைப்படியாக அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.		
(ஐ)	பதிவாளர் நாயகத்தின் கையேட்டின் 375 ஆம் பிரிவின் பிரகாரம் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உறுதிகளின் இரண்டாவது பிரதி அல்லது வெற்று அறிக்கையினை அனுப்ப தவறிய நொத்தாரிசுகள் சம்பந்தமாக முறைகேட்டு அறிக்கை தயாரித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் மற்றும் 2024 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதி சம்பந்தமாக மேற்கொண்டு தெரிவுப் பரீட்சிப்பின் பிரகாரம் தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 62 நொத்தாரிசுகளால் உறுதிகளின் இரண்டாவது பிரதிம் 06 நொத்தாரிசுகளால் வெற்று அறிக்கையும் சமர்ப்பித்தல் தாமதிக்கப்பட்டிருந்தும் அவர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நடவடிக்கைகளுக்காக போதியளவு ஆளணியினரை ஈடுபடுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் இந்த நிலைமை உருவாகியுள்ளதுடன் நொத்தாரிசு பிரிவுக்கே இருப்பது ஒரு ஆளணி உதவியாளர் மாத்திரமாக இருந்த போதிலும் 62 நொத்தாரிசுகளில் 06 நொத்தாரிசுகள் சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருநதது.	பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிய நொத்தாரிசு சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு உறுதிகளின் இரண்டாவது பிரதியை ஒப்படைக்கத் தவறியுள்ள நொத்தாரிசுகளுக்கு முறைகேட்டு அறிக்கை அனுப்பிவைக்கப்படாதிருந்ததனால் பதிவாளர் நாயகத்தின் கையேட்டின் 375(9) ஆம் பிரவின் பிரகாரம் தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது தண்டப்பணத்தை விதிப்பதற்கு உள்ள சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது.	இந்த நடவடிக்கைக்காக ஒரு அலுவலக செயற்பாட்டு உதவியாளர் மாத்திரம் உள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் முறைகேட்டு அறிக்கையினை தயாரித்தல் இறுதிக் கட்டத்தில் காணப்பட்டது. 2022, 2023 ஆம் ஆண்டுகளில் ஒரு பகுதி முறைகேட்டு அறிக்கைகளை தயாரித்தல் முடிவடைந்துள்ளதுடன் குறிப்பிட்ட அளவான முறைகேட்டு அறிக்கைகள் வலயத்திற்குப் பொறுப்பான பிரதி திவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை வினைத்திறனாக அமுல்ப்படுத்துவ தற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.
(ஓ)	பதிவாளர் நாயகத்தின் கையேட்டின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் காணிப் பதிவாளரினால் தமது மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நொத்தாரிசுகளுக்குமாக	நொத்தாரிசுகளின் தனிப்பட்ட கோவைகளைப் பேணுவதற்காக போதியளவு ஆளணியினர் இல்லாதிருந்த போதிலும் 2023 இலிருந்து	நொத்தாரிசுகளின் தனிப்பட்ட கோவைகளை முறைப்படியாக பேணுவதற்கு

	நொத்தாரிசுகளின் பிழைகள் தொடர்பான பதிவேடும், நொத்தாரிசுகளின் நியமனங்கள், முறைகேட்டு அறிக்கை, கடமைகளை முடிவு செய்தல், முதலிய விடயங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வைத்திருக்க வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த கோவைகளானது பல்வேறு குறைபாடுகளுடன் பேணப்பட்டிருந்தது.	புதிய கோவைகளை முழுமையான கோவைகளாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பழைய கோவைகளிலுள்ள குறைபாடுகளை பூரணப்படுத்தி தருமாறு நொத்தாரிசுகளுக்கு தெரிவிக்கப்பட்டது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஔ)	தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு 2022 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை கிடைத்துள்ள உறுதிகளின் 165,540 இரண்டாவது பிரதிகள் 117 ஆவது அதிகாரமான ஆவணங்கபைப் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் 05 ஆம் பிரிவு மற்றும் பதிவாளர் நாயகத்தின் கையேட்டின் 548 ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதிகளாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆவணக் காப்பகத்தில் முறையற்ற வகையில் ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நொத்தாரிசுகளினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனைத்து ஆவணங்களும் காணிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலப்பகுதிக்குரிய அனைத்து ஆவணங்களும் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக தொகுதிகளாக கோவை செய்யப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டின் இரண்டாவது பிரதிகளை தெரிவு செய்து தற்காலிக பிரதி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.	ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31(23) ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி விருப்பு மற்றும் முழுமையற்ற ஆவணங்களையும் உள்ளடக்கி தமது முன்னிலையில் எழுதி கையொப்பமிட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஆவணங்கள் அவை எழுதி கையொப்பமிடுகின்ற அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வரிசை ஒழுங்குகளுக்கு இணைந்ததாக முழு எண்களைப் பயன்படுத்தி இலக்கமிட்டு நொத்தாரிசுகளால் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் சில நொத்தாரிசுகளால் ஒரே இலக்கத்தில் 02 உறுதிகள் அல்லது 03 உறுதிகள் எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் A மற்றும் B இலக்கங்களைப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அவ்வாறு நொத்தாரிசு கட்டளைச்	ஒரே இலக்கத்தில் எழுதப்பட்ட உறுதிகள் சத்தியப் பிரமாணத்துடன் பதிவுசெய்தல் இடம்பெற்றுள்ளது. யுஇடீ போன்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உறுதிகளைப் பதிவுசெய்தல் நிராகரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிய நொத்தாரிசுகள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சட்டத்தின் 31 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள சட்ட விதிகளைப் பின்பற்றுதல் மற்றும் அவற்றிக்கு இணங்க செயற்படத் தவறுகின்ற நொத்தாரிசுகள் சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(கா)	தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகம் மாதாந்தம் ரூபா. 375,000 வீதம் ரூபா. 4,500,000 வருடாந்த வாடகை செலுத்தி வெளித்தரப்பினரின் மாடியில் வாடகை அடிப்படையில் செயற்பட்டு வந்ததுடன் போதியளவு இடவசதிகள் இல்லாமை, பராமரிப்பு நடவடிக்கைகள் முறைப்படியாக மேற்கொள்ளப்படாமையின் காரணமாக ஆவணக் காப்பகத்திற்குள் மழைநீர் கசிதல், உட்கூரைகள் கரையான்களின் பாதிப்பிற்கு உட்பட்டிருந்தமை என்பன அலுவலக செயற்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கு சவாலாக இருந்தது.	ஆவணக்காப்பக்தின் கூரையானது கோட்டை நகரசபையின் மூலம் மழைநீர் கசிவதனை தவிர்ப்பதற்கான பரிகாரம் பயன்படுத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.	கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
திணைக்களத்தின் துாரநோக்கு மற்றும் செயற்பணிகளினூடாக மிகவும் பரந்த துறைகள் உள்ளடக்கப்படவதுடன் அதனை அடைந்துகொள்வதனை முன்னிட்டு திணைக்களத்தினால், • நிலையான மற்றும் அசையும் ஆதனங்களுக்குரிய ஆவணங்கள், அட்டோர்னி அனுமதிப்பத்திரங்கள், நிரந்தர ஆதனங்களுக்குரிய உரிமைகள் மற்றும் சிவில் பதிவுசெய்தல்கள் • பொறுப்பாண்மையும் ஆவணங்களை பேணிக்காத்தலும் • சான்றிதழ் பிரதிகளை வழங்குதலாக மூன்று பிரதான செயற்பாடுகளின் கீழ் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும்	திணைக்களத்தின் மிகுதிச் செயற்பாடுகளுக்காகவும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் உருவதக்கும் நடவடிக்கைகள் தற்பொழு இடம்பெற்று வருகின்றது என தெரிவிக்கப்பட்டது.	திணைக்களத்தின் ஒட்டுமொத்த துாரநோக்கு மற்றும் செயற்பணி தொடர்பான குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை உருவாக்குதல் வேண்டும்.

இலக்குகளை கவனித்துப் பாக்கும் போது சிவில் பதிவுசெய்தலினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் உருவாக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

6. நல்லாளுகை

6.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு நொத்தாரிசுகளினால் காணி உறுதியை எழுதும் போது பின்பற்றப்பட வேண்டிய சட்ட விதிகளை பின்பற்றாது குறைபாடுகளுடன் எழுதி சான்றுபடுத்தி பதிவுசெய்தமைக்காக தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளின் போது ஒப்படைத்த காணி உறுதிகள் முறையே 84, 313, 711 மற்றும் 995 வீதம் 2,103 உறுதிகள் அவற்றின் பிழைகளை சரிசெய்யாமையின் காரணமாக பதிவு செய்வதற்கு முடியாது விடயத்திற்கு பொறுப்பான உத்திரோயகத்தரினால் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் அறக்கை ஆவணம் நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 2024 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைகள் நாளதுவரையாக்கப்பட்டு வருவதுடன் அது முடிவடைந்த பின்னர் 2021 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.	குறைபாடுகள் இல்லாது எழுதப்பட்ட உறுதிகளை மாத்திரம் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரைகள
(அ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உளளவாறு தீணைக்களத்தின் 2,842 ஆன அங்கீகரித்த ஆளணியினரில் 238 ஆளணியினர் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த 12 பதவிகளும், மூன்றாம் மட்டத்தைச் சேர்ந்த 82 பதவிகளும் இரண்டாம் மட்டத்தைச் சேர்நத 124 பதவிகளும் ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த 20 பதவிகளும் அவற்றிற்கு மத்தியில் இருந்தன.	மேலதிக பதிவாளர் நாயகம் பதவி மற்றும் இரண்டு சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் பதவிகளுக்காக ஆட்சேரப்பு நடைமுறையில் உள்ள தகமைகளை நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்கள் இல்லாததனால் அப்பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடங்கள் காணப்படுகின்ற	ஆளணியினர் வெற்றிடங்களை நிரப்புதலினை துரிதமாக செய்தல் வேண்டும்.

	பதிவாளர் நாயகம் சேவையில் பல்வேறு 57 பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது கீழ் மட்டத்திலுள்ள பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	03 உதவி பதிவாளர் நாயகம் பதவிகளை திறமைகளை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் பரீட்சை அறிவுறுத்தல்களை வர்த்தமானியில் வெளியிடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. வெற்றிடம் காணப்படுகின்ற காணிப் பதிவாளர் பதவிக்காக ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் பரீட்சைகளை நடாத்துவதற்கான திகதி பரீட்சை திணைக்களத்தினால் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் வெற்றிடமாகக் காணப்படுகின்ற 34 மேலதிக மாவட்ட பதிவாளர் பதவிகளுக்கு மத்தியில் 17 பதவிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக கோருதல் இடம்பெற்றுள்ளது. ஏனைய 17 பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் பரீட்ச்சையின் வர்த்தமானி அறிவுறுத்தல் அவதானிப்புக்களுக்காக பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 400 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான உள்ளபடியான ஆளணியினர் 1,704 ஆக இருந்ததுடன் 2025 சனவரி 29 ஆந் திகதி 1,298 பதவிகளுக்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க 2025 மே 31 ஆந் திகதி வரை இன்னும் 406 பதவிகள் மிகையாகக் காணப்பட்டன.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1190/Vol.III ஆம் இலக்க 2025-01-29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 1,298 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.	அங்கீகரித்த எல்லையின் கீழ் மாத்திரம் ஆளணியினர் வெற்றிடங்களை நிரப்புவதனை கவனித்துக்கொள்ளல் வேண்டும்.

(இ)	திணைக்களத்தின் மேலதிப பதிவாளர் நாயகம் பதவியில் தற்பொழுது கடமையை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தரினை நியமித்து தற்பொழுது 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் அப்பதவிகளுக்காக தற்பொழுது இருக்கின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நிரந்தராக நியமிப்பதற்காக தகமைகளை பூரணப்படுத்தியிருக்கவில்லை. காணப்படுகின்ற 02 சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் பதவிகளுக்காக குழு நேரம் கடமைகளை நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அப்பதவிகளுக்காக தற்பொழுது இருக்கின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்களை நிரந்தராக நியமிப்பதற்காக தகமைகளை பூரணப்படுத்தியிருக்கவில்லை. திணைக்களத்தினால் பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை உரிய காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்காமையின் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது எனவும் அதன் காரணமாக இன்னும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுக்குமாயின் இப்பதவிகளுக்காக நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு முடியாது சேவை அனுபவம் இல்லாத தகமைகளைப் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களை இன்னும் இவ்வாறு கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்க வேண்டி ஏற்படும்.	மேலதிக பதிவாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் பதவிகளுக்காக ஆட்சேர்பபு நடைமுறையில் உள்ள தகமைகளை நிறைவேற்றியுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாததனால் அப்பதவிகளுக்காக உதவி பதிவாளர் நாயகம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக சேவைப் பிரமாணக் குறிப்பினை மீண்டும் மீளாய்வு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என தெரிவிக்கப்பட்டது.	நியமித்தல்கள் பதவியுயர்த்துதல் கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட் டு தகமையுள்ள உத்தியோகத்தர் களை உருவாக்குவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.